# 03 அக்டோபர் 2023 - தினசரி நடப்பு நடப்பு நிகழ்வுகள்

| | |
|---|---|
| **கிரிவலப் பாதையில் உள்ள சாதுக்கள் கண்காணிப்பில் உள்ளனர்** | **செய்தி:**<br>**கார்த்திகை தீபம் திருவிழாவை** முன்னிட்டு **கிரிவலம் பாதையில் உள்ள சாதுக்கள்** பாதுகாப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக சோதனைக்கு **உட்படுத்தப்படுகின்றனர்**.<br><br>**முக்கிய தகவல்கள் :**<br>• கார்த்திகை தீபம் மற்றும் பௌர்ணமி திருவிழாக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக திருவண்ணாமலையில் உள்ள 14 **கிலோமீட்டர் நீளமுள்ள கிரிவலம் பாதையில்** உள்ள சாதுக்கள் மற்றும் துறவிகள் மாவட்ட காவல்துறையினரின் கண்காணிப்பில் உள்ளனர்.<br>• ஊரில் நடக்கும் குற்றங்கள் மற்றும் பிற சட்ட விரோத செயல்களை தடுக்க இந்த முயற்சி காவல்துறைக்கு உதவியாக உள்ளது.<br>• முயற்சியின் ஒரு பகுதியாக, சாதுக்களின் கைரேகைகள் மற்றும் புகைப்படங்கள் எடுக்கப்பட்டன.<br>• கைரேகைகள் **தேசிய தானியங்கி கைரேகை அடையாள அமைப்புக்கு** (NAFIS) அனுப்பப்படும்.<br>• NAFIS புது தில்லியில் உள்ள மத்திய கைரேகை அலுவலகத்தால்( Central Fingerprint Bureau(CFPB)) பராமரிக்கப்படுகிறது. |
| **கார்த்திகை தீபம் திருவிழா** | **கார்த்திகை தீபம் திருவிழா**<br>• இது தென்னிந்தியாவில் உள்ள தமிழ் இந்துக்கள் மற்றும் பிற சமூகங்களால் கொண்டாடப்படும் இந்து மத விளக்கு திருவிழா ஆகும்.<br>• இது **கார்த்திகை மாத பௌர்ணமி நாளில்** வருகிறது. |

| | |
|---|---|
| | • முழு நிலவு கார்த்திகை விண்மீன் (Pleiades) உடன் இணைந்திருக்கும் போது இத் திருவிழா கொண்டாடப்படுகிறது.<br>• **தீமைக்கு எதிரான நன்மையின் வெற்றியைக் குறிக்கும்** விதமாகவும், செழிப்பு மற்றும் மகிழ்ச்சியைக் கொண்டுவரும் விதமாகவும் இந்தத் திருவிழா கொண்டாடப்படுகிறது.<br><br>**உங்களுக்கு தெரியுமா?**<br>கார்த்திகை திருவிழாவின் மற்றொரு பெயர் **"விளக்குகளின் திருவிழா"** ஆகும் . |
| **ரப்பர் தோட்டங்கள், தமிழ்நாடு** | **செய்தி:**<br>அனுமதி வழங்குவதில் தாமதம் ஆவதால் தமிழக ரப்பர் தோட்டங்களை பாதிக்கிறது.<br><br>**முக்கிய தகவல்கள்** :<br>• தமிழகத்தில் உள்ள ரப்பர் தோட்டக்காரர்களுக்கு மறு நடவு செய்வதற்கு அனுமதி தேவைப்படுகிறது.<br>• அனுமதி தாமதமாக கிடைப்பதனால் ரப்பர் செடிகளை நடவு செய்வதற்கான சரியான பருவத்தை இழக்கிறது.<br>• ஏனெனில் **தோட்டங்களில் வளர்ந்த மற்றும் பயிரிடப்பட்ட பகுதிகள்** 1979 **இல் தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டதால், மாவட்ட அளவிலான வனக் குழுக்களின் அனுமதியைப் பெறுவதற்கு பல மாதங்கள் தாமதம் ஆகுகின்றன .**<br>• சிறிய நிலங்களை வைத்திருக்கும் தோட்டக்காரர்கள் 10 அல்லது 15 சென்ட் நிலங்களை விற்க முடியாமல் தவிக்கின்றனர் ஏனெனில் நிலம் வனப்பகுதி நிலமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. |

<table>
<tr>
<td>

**நீலகிரியில் இரண்டாவது பருவம்**



</td>
<td>

**செய்தி**:
நீலகிரியில் இரண்டாவது பருவ மலர் கண்காட்சி தொடங்கியது.

**முக்கிய தகவல்கள்** :

- **நீலகிரியில் இரண்டாவது பருவம் என அழைக்கப்படும் குளிர்கால சுற்றுலா பருவம்** , தமிழக சுற்றுலாத்துறை அமைச்சர், கே.ராமச்சந்திரன் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.
- உதகமண்டலத்தில் உள்ள **அரசு தாவரவியல் பூங்காவில்** (GBG) துவக்க விழா நடந்தது.
- **"பசுமைக்கு செல்லுங்கள்(Go Green)"** என்ற செய்தியை மக்களுக்கு வலியுறுத்தும் வகையில் 21,500க்கும் மேற்பட்ட தொட்டிகளில் பூச்செடிகள் வைக்கப்பட்டுள்ளன .
- மேலும் **சந்திரயான்-3 நிலவு பயணத்தை** நினைவு கூறும் வகையில் 7,500 தாவரங்கள் வைக்கப்பட்டுள்ளன .

**உங்களுக்கு தெரியுமா?**
இந்தியாவில் மகாராஷ்டிராவிற்கு அடுத்தபடியாக அதிக சுற்றுலாப் பயணிகளை தமிழகம் பெற்றுள்ளது .

</td>
</tr>
<tr>
<td>

**சென்னை மெட்ரோ ரெயில் மேலும் சூரிய மின் உற்பத்தி நிலையங்களை அமைக்க உள்ளது .**

</td>
<td>

**செய்தி**:
சென்னை மெட்ரோ ரயில் **கூரை மற்றும் வாகன நிறுத்துமிடங்களில் அதிக சூரிய மின் உற்பத்தி நிலையங்களை** அமைக்க முடிவு செய்துள்ளது.

**முக்கிய தகவல்கள்** :

- கூரை மற்றும் வாகன நிறுத்துமிடங்களில் சூரிய மின் நிலையங்களை அமைப்பதன் மூலம் சூரிய மின் உற்பத்தி திறனை அதிகரித்தல்.
- **தற்போதைய நிலவரப்படி சென்னை மெட்ரோ ரெயில் சூரிய கூரை ஆலைகளின் 6.4 Mwp (Megawatt Peak) மூலம் 12-15% ஆற்றலை உருவாக்குகிறது.**

</td>
</tr>
</table>

| | |
|---|---|
| | • ரயில் நிலையங்கள் மற்றும் வாகன நிறுத்துமிடங்களின் கூரைகளில் கூடுதலான சூரிய மின் நிலையங்களை அமைப்பதற்கு இரண்டு டெண்டர்கள் நடத்தப்பட்டுள்ளன.<br>• ஒன்று 5.74 Mwp மின்சாரத்தை நிலைய கட்டமைப்புகளின் கூரையில் அமைப்பது.மற்றொன்று நிலையங்களின் வாகன நிறுத்துமிடங்களில் 3 Mwpக்கு சூரிய மின் நிலையங்களை அமைப்பது ஆகும் . |
| **தமிழகத்தில் 86 பறவை இனங்கள் வேகமாக அழிந்து வருகின்றன.** | **செய்தி:**<br>**இந்தியாவின் மாநிலப் பறவைகள் (SOIB) 2023 அறிக்கையில், தமிழகத்தில் பதிவு செய்யப்பட்ட 110 வகையான பறவைகள்** தற்போது நாடு முழுவதும் அழிந்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளது.<br>**முக்கிய குறிப்புகள் :**<br>• தமிழகத்தில் பறவைகள் உட்பட 86 இனங்கள் அழிந்து வருகின்றன.<br>• **நீலச்சிறகு வாத்து, தட்டைவாயன், மண்கொத்தி மற்றும் கிளுவை** பறவை இனங்கள் **"வேகமாக அழிந்து வருகின்றன".**<br>• SOIB 2023 அறிக்கையில் உள்ள தரவுகளைப் பயன்படுத்தி, சேலம் பறவையியல் அறக்கட்டளை (SOF) இதை எடுத்துக்காட்டியுள்ளது. |

***பதிப்புரிமை © Adda247***

*அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. இந்த ஆவணத்தின் எந்தப் பகுதியையும் Adda247 இன் முன் அனுமதியின்றி மீண்டும் உருவாக்கவோ, மீட்டெடுப்பு அமைப்பில் சேமிக்கவோ அல்லது எந்த வடிவத்திலும் அல்லது எந்த வகையிலும் மின்னணு, இயந்திர, புகைப்பட நகல், பதிவு செய்தல் அல்லது வேறுவிதமாக அனுப்பக்கூடாது.*